செ.வெ.எண் : 965 நாள் : 14.12.2009

<u>தமிழ் நாடு அரசு</u>

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை</u>

<u>செய்திக் குறிப்பு</u>

ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 2009–2010–ம் கல்வி ஆண்டில் வேலைவாய்ப்பக மாநில பதிவு மூப்பு அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து 305 இடைநிலை ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணி நாடுநர்களுக்கு 22.12.2009 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை–5, திருவல்லிக்கேணியில் உள்ள வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் கல்லூரியில் கலந்தாய்வு மூலம் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட உள்ளன.

கலந்தாய்வின் போது உடல் ஊனமுற்றோர்களுக்கு முதலிலும், அதனைத் தொடர்ந்து பெண்களுக்கும், பிறகு ஆண்களுக்கும் பணியிட ஒதுக்கீடு வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். கலந்தாய்வு அன்றே அனைத்து பணி நாடுநர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்படும்.

ஒம்/–பொ.சிவசங்கரன்,
ஆதிதிராவிடர் நல ஆணையர்,

14/12/09

ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக.

வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9